SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஆகஸ்ட் - 2019

(1-10 Days)

# TNPSC ZERO CURRENT AFFAIRS PRELIMS

**0% Effort | 100% Results**

www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.


Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# ஆகஸ்ட் (1-10) - 2019

## தமிழ்நாடு

1. 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை அனந்த சரஸ் குளத்திலிருந்து அத்திவரதர் சிலை வெளியே எடுக்கப்படுகிறது. "அனந்த சரஸ்" குளத்தின் நிலையை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க எம்.கார்த்திகேயன் மற்றும் எம்.மகாராஜன் என இரு நபர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## தேசம்

1. அரசியலமைப்பு விதி 370 மற்றும் 35 (A) ரத்து செய்யப்பட்டது:
ஆகஸ்ட் 5, 2019 அன்று இந்தியக் குடியரசுத்தலைவர் அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான விண்ணப்பம்) ஆணை, 2019-னை வெளியிட்டார்.
   - ✓ இந்த ஆணைப்படி, இந்திய அரசியலமைப்பின் விதிகள் இப்போது இம்மாநிலத்திற்கும் பொருந்தும்
   - ✓ இந்த ஆணை நடைமுறைக்கு வந்தால், அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான விண்ணப்பம்) ஆணை, 1954-னை பதிலீடு செய்யும்.
   - ✓ ஒரு தனி மசோதா : ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா-2019 ஆனது ஜம்மு மற்றும் காஷ்மீரை தனி யூனியன் பிரதேசமாகவும் (சட்டமன்றத்துடன்) மற்றும் லடாக்கினை தனி யூனியன் பிரதேசமாகவும் (சட்டமன்றம் இல்லாமல்) மாநிலத்தை இரண்டாகப் பிரிக்க அறிமுகப்படுத்தப்பட்டது.
   - ✓ ஜம்மு-காஷ்மீர் இட ஒதுக்கீடு (இரண்டாவது திருத்தம்) மசோதா, 2019 பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு (EWS) கல்வி நிறுவனங்கள் மற்றும் ஜம்மு-காஷ்மீரின் அரசாங்க வேலைகளில் இடஒதுக்கீட்டை நீட்டிக்க அறிமுகப்படுத்தப்பட்டது.
2. "நீதி கே போலோ" பிரச்சாரம் : மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மாநிலத்தில் உள்ள பொதுமக்கள் மாநிலத்தின் குறைகள் மற்றும் பிற சமூக பிரச்சினைகளை தெரிவிக்க "த்தி கே போலோ" பிரச்சாரத்தை தொடங்கினார்.
3. மேற்கு வங்க அரசாங்கம் "பசுமையை காப்பாற்று, சுத்தமாக இருங்கள்" (Save Green, Stay Clean) பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
4. மத்திய எஃகு மற்றும் பெட்ரோலிய, இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் புத்தாக்க மற்றும் கண்டுபிடிப்பு உணர்வை சமூக நிலையில் ஊக்குவிக்க சமீபத்தில் அடல் சமூக கண்டுபிடிப்பு மையத்தை (ACIC) புதுடெல்லியில் தொடங்கினார்.
5. குடியிருப்பு இணைப்பின் கீழ் 200 யூனிட் வரை நுகரும் மக்களுக்கு இலவச மின்சாரம் என புதுடெல்லி முதல்வர் அறிவித்தார்.
6. போலீஸ் விசாரணையில் டிஜிட்டல் கைரேகை மற்றும் கருவிழி ஸ்கேனிங் முறையை பின்பற்றும் இந்தியாவின் முதல் மாநிலம் மகாராஷ்டிரா

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

7. இந்தியாவின் முதல் முப்பரிமாண (3டி) ஸ்மார்ட் போக்குவரத்து சமிக்ஞை “இன்டெலைட்ஸ்” பஞ்சாபின் மொஹாலியில் தொடங்கப்பட்டுள்ளது.

8. ராஜஸ்தான் “சிறந்த கல்லூரிகளுக்கான வள உதவி” (Resource Assistance for colleges with Excellence - RACE) என்ற ஒரு புதிய உயர்கல்வி மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் மாவட்ட அளவில் வளங்கள் கிடைப்பதை பகுத்தறிவு செய்து அரசு கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் அசையும் சொத்துக்களை பங்கீடு செய்ய இயலும்.

9. மூத்த குடிமக்கள் கூறியது போல் நகரத்தின் வாய்வழி வரலாறுகளை பதிவு செய்ய “வாய்வழி வரலாறு திட்டத்தை” டெல்லி அறிமுகப்படுத்தியுள்ளது.

10. வாலண்டினா எலாங்பாம் என்ற 9 வயது சிறுமி வெட்டப்பட்ட மரங்களைப் பார்த்து அழுத காணொளி வைரலானதைத் தொடர்ந்து அவரை மணிப்பூர் மாநில அரசாங்கம் மாநிலத்தின் பசுமைத் தூதராக நியமித்துள்ளது.

11. மத்திய பிரதேச அரசாங்கம் பணம் கொடுப்பவர்களிடமிருந்து பழங்குடியினர் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ளது.

12. மத்திய பிரதேச அரசு பழங்குடியின குடும்பங்களில் குழந்தை பிறப்பு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் இறப்பின் போது அக்குடும்பங்களுக்கு உதவி வழங்க “முதலமைச்சர் மாதத் யோஜனா” எனும் திட்டத்தை அறிவித்துள்ளது.

13) ஐரோப்பிய தேசத்தில் செவிலியர்களின் கடுமையான பற்றாக்குறையை தீர்க்க நெதர்லாந்திற்கு கேரள அரசு உதவ உள்ளது.

14) அரசு வேலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான (EWS) 10% இடஒதுக்கீட்டை ஜம்மு -காஷ்மீருக்கு நீட்டிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

15) மத்திய அரசாங்கமானது “ஒரு நாடு ஒரு குடும்ப அட்டை ” திட்டத்தை ஆகஸ்ட் 01, 2019 முதல் குஜராத், மகாராஷ்டிரம், தெலுங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேசம் என நான்கு மாநிலங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## சர்வதேசம்

1) ரஷ்யாவுடனான மத்திய தூர ஏவுகணை ஒப்பந்தத்திலிருந்து (INF) அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக விலகியுள்ளது.

2) ஆகஸ்ட் 08 – 2019 அன்று ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பு விதி 370 ரத்தானதைத் தொடர்ந்து லாகூர் - அட்டாரி சம்ஜெளதா எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை பாகிஸ்தான் நிறுத்தியது.

3) பெண்கள் ஆண்களின் அனுமதியின்றி சுதந்திரமாக பயணம் செய்யவும் மற்றும் கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கவும் சவுதி அரேபியா அனுமதி அளித்துள்ளது.

# பொருளாதாரம்

1) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (எஸ்பிஐ)-வின் ஷாங்காய் கிளை சீனாவின் தேசிய முன்கூட்டியே செலுத்தும் முறையில் (CNAPS) இணைந்த முதல் இந்திய வங்கியாக மாறியுள்ளது.

# விளையாட்டு

1) முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் "**கபில் தேவ்**" "**பாரத் கௌரவ் விருது**" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# திட்டங்கள் / யோஜனா

| திட்டம்/யோஜனா | நோக்கம் / ஏன் செய்தியில் வந்தது? | அமைச்சகம்/அமைச்சரவை /மாநிலம் |
|---|---|---|
| **விஹாலி திக்ரி யோஜனா (Vhali Dikri Yojaya)** | பெண் குழந்தைகளின் நலனுக்காக | குஜராத் |

# மாநாடுகள் & கருத்தரங்குகள்

| மாநாடு/கருத்தரங்கு | காரணம்/கருத்துரு/வெளிப்பாடு | நடைபெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|
| **52-வது ஆசியான் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூடுகை** | | பாங்காக், தாய்லாந்து | |
| **22-வது தேசிய மின் ஆளுகை கருத்தரங்கு** | கருத்துரு: "டிஜிட்டல் இந்தியா : சிறப்பான வெற்றி" | ஷில்லாங், மேகாலயா | 2019 ஆகஸ்ட் 08 - 09 |

# குறியீடு

| குறியீடு | நோக்கம்/வெளியிடுவது | இந்தியாவின் தரநிலை | முதலிடம் |
|---|---|---|---|
| **உலகளாவிய உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) தரவரிசை** | உலக வங்கி | 7 | அமெரிக்கா |

# குழுக்கள்

| | |
|---|---|
| **என் கோபால்சுவாமி குழு** | பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) 20 நிறுவனங்களுக்கு புகழ்பெற்ற நிறுவனம் (IoE) அந்தஸ்தை வழங்க பரிந்துரைத்துள்ளது. |

## பாதுகாப்பு & விண்வெளி

| பாதுகாப்பு & விண்வெளி | நோக்கம் | நாடு/மாநிலம் /அமைப்பு |
|---|---|---|
| **விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு கட்டுப்பாட்டு மையம் - பெங்களூர்** | கட்டுப்பாட்டு மையத்தின் நோக்கம் விண்வெளி குப்பைகளிலிருந்து அதிக மதிப்புள்ள விண்வெளி சொத்துகளை கண்காணித்து பாதுகாப்பதாகும். | இஸ்ரோ |
| **ஹோப் புரோப்** | ஜூலை 2020-ல் செவ்வாய் க்கு அனுப்பப்பட உள்ள அரபு நாட்டின் முதல் விண்கலன் | ஐக்கிய அரபு அமீரகம் |

## விருதுகள்

| விருது/பரிசு | நபர்/அமைப்பு |
|---|---|
| **ரமோன் மகசேசே விருது – 2019** | ரவீஷ் குமார் |
| **மிஸ் இங்கிலாந்து 2019** | பாஷா முகர்ஜி |
| **ஐபிசி 2019 சிறப்பிற்கான சர்வதேச மரியாதை** | ஆண்டிசெர்கிஸ் |
| **கினியா குடியரசின் மிக உயர்ந்த விருது "நேஷனல் ஆர்டர் ஆப் மெரிட்"** | ராம்நாத் கோவிந்த் |

## நியமனங்கள் & செய்திகளில் வந்த நபர்கள்

| நபர் | பதவி/நிலை |
|---|---|
| **ராகேஷ் அஸ்தானா** | போதைப் பொருள் கட்டுப்பாட்டு பணியகத்தின் இயக்குநர் ஜெனரல் |

## செய்திகளில் வந்த பெண்கள்

| | |
|---|---|
| **சுஷ்மா ஸ்வராஜ் , முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர்** | ஆகஸ்ட் 06, 2019-ல் இயற்கை எய்தினார். |
| **பி.வி. சிந்து** | ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையால் உலகின் அதிக சம்பளம் வாங்கும் பெண் விளையாட்டு வீரர்களில் இந்தியாவிலிருந்து இடம்பெற்ற ஒரே விளையாட்டு வீரர். |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்

| புத்தகம் | ஆசிரியர் |
|---|---|
| **"Tools and Weapons : The Promise and the Peril of the Digital Age"** | பிராட் ஸ்மித் |

## முக்கிய தினங்கள்

| தினம் | நிகழ்வு | கருத்துரு/முக்கியத்துவம் |
|---|---|---|
| **ஆகஸ்ட்- 07** | தேசிய கைத்தறி தினம் | நாட்டில் கைத்தறி தொழிலை முன்னிலைப்படுத்தி கைத்தறி நெசவாளர்களை கௌரவிக்கிறது. |
| **ஆகஸ்ட்- 09** | உலக பழங்குடியினர் தினம் / பன்னாட்டு உலக பழங்குடி மக்கள் தினம் | **கருத்துரு:** "பழங்குடியின / உள்நாட்டு மொழிகள்" |
| **ஆகஸ்ட்- 10** | உலக உயிரிஎரிபொருள் தினம் | **கருத்துரு:** "பயன்படுத்திய சமையல் எண்ணெய்யிலிருந்து உயிரி டீசல் உற்பத்தி" |

- ஆகஸ்ட் 01 – ஆகஸ்ட் 07, 2019 ஒவ்வொரு ஆண்டும் உலக தாய்ப்பால் வாரம் கடைபிடிக்கப்படுகிறது.
- கருத்துரு : "பெற்றோரை அதிகாரப்படுத்துதல், தாய்ப்பால் கொடுத்தல்"

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS